ரெஜிஸ்டர் நெ. M. 3855.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. அக்டோபர், 1942 நெ. 7.

387

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விய்யன்ன, பி.ஏ., [illegible].

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

பொருள் அடக்கம்.

1. ...ங்கம்.—

பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் பொது சுகாதாரமும், பாதுகாப்பும் 283

2. கிராம அபிவிருத்தி—R, காலெடி, M.A., I.C.S. ... 288

3. கவர்மெண்டு ஆதரவில் 1940-41 வருஷத்தில் வயது வந்தவர்க்கள் கல்வி திட்டம் 293

4. செய்தித் திரட்டு 295

கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பிரதிநிதிகளின் பெயரை உடனே அனுப்பவேண்டியது.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் பொதுக்கூட்டம்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் பொதுக்கூட்டம் 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, பகல் 12-மணிக்கு மதராஸ் பிரொவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க் கட்டடத்தில், (சென்னை ஹைகோர்ட்டுக்கு எதிரில்) நடக்கும். எல்லா மெம்பர்களும் வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

விஷயங்கள்.

1. 31-10-42-ல் முடியும் 4½ ஆண்டில் யூனியன் வேலையைப் பற்றிக் காரியதரிசிகளின் அறிக்கை.
2. சர்க்காரின் புதிய பஞ்சாயத்து மசோதாவைப்பற்றி யோசித்தல்.
3. அமைப்புத்திட்டத் திருத்தப் பிரேரணைகள். (அடுத்த பக்கத்தில் காண்க.)
4. உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.
   (a) நிர்வாக சபை.
   (b) தலைவர், உபதலைவர், பொதுக்காரியதரிசி, உதவிக்காரியதரிசிகள்.
5. பொதுக்காரியதரிசி பிரஸ்தாபிக்கும் இதர விஷயங்களும், மெம்பர்கள் முன் அறிவிப்புடன் கொண்டுவரும் பிரேரணைகளும்.

குறிப்பு:—(i) இக்கான்பரன்சுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதில் ஏற்படும் செலவுகளைச் சர்க்கார் அனுமதிக்கவில்லை; எனினும் இதைப் பொருட்படுத்தாமல் சகல அங்கத்தினரும் கூட்டத்தில் ஆஜராயிருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்; எப்படியாவது செலவைச் சரிக்கட்டிக்கொள்ளலாம். எல்லாப் பஞ்சாயத்துகளும் பிரதிநிதிகளை அனுப்பி யூனியனைப் பலப்படுத்துவது நிரம்பவும் அவசியம்.

(ii) இந்தக்கூட்டமானது மாகாண கோவாபரேடிவ் யூனியன் பொதுக்கூட்டத்தின்போது நடக்கிறது. சாதாரணமாக கோவாபரேடிவ் பிரதிநிதிகள் பஞ்சாயத்து அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஆகையால், பஞ்சாயத்துகள் ஷெ மகாநாட்டுக்கு ஒரே பிரதிநிதியை தேர்ந்தெடுத்தால் செலவு மிச்சப்படும்.

அமைப்புத்திட்டத் திருத்தம்.

திரு. வி. வியான்றை ப்ரபோஸல்

உபவிதி (பை-லா) 16.

தலைவர், உபதலைவர், காரியதரிசிகள், இன்னும் மற்ற நிர்வாக சபை அங்கத்தினரை உபவிதி (பை-லா) 18 (4) படி தேர்ந்தெடுக்க வேண்டியது.

திருத்தம்.

18 (4) உபவிதிப்படி "மற்ற மெம்பர்களை நிர்வாக சபைக்கு" என்ற வார்த்தைகளை எடுத்துவிட.

உபவிதி (பை-லா) 18 (4)

ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள பஞ்சாயத்து மெம்பர்களிலிருந்து மூன்று மெம்பர்களை நிர்வாக சபைக்கு தேர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திருத்தம்.

இவ்வார்த்தைகளைச் சேர்க்க.

'தபால் மூலம் தேர்தல் நடத்துவதைப் பற்றி நிர்வாக சபை அனுசரணையாக நிர்ணயிக்கும் ரூல்களின்படி தபால் மூலம் ஓட்டு செய்வதால்.'

உபவிதி (பை-லா) 22.

நிர்வாக சபைக் கூட்டங்களுக்குக் கோரம் (quorum) 12.

திருத்தம்.

நிர்வாக சபைக் கூட்டங்களுக்குக் கோரம் 10.

உபவிதி (பை-லா) 30.

தங்களுக்கு அவசியமும் உசிதமுமாகத் தோன்றினால் எந்த அதிகாரத்தையும் தலைவருக்காவது, ஒரு காரியக் கமிட்டிக்காவது, நிர்வாகக் கமிட்டி விட்டுவிடலாம்.

திருத்தம்.

காரியக் கமிட்டி என்னும் பதங்களுக்குப் பின்னால் "அல்லது பொதுக் காரியதரிசிக்கு" என்று சேர்க்க.

The Village Panchayat Journal.

VOL. V] OCTOBER, 1942. [No. 7.

The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.

Administration of Public Health and Safety by Village Panchayats.

In the statement of objects and reasons attached to the proposed Panchayat Bill the Government recognise "it will not be possible for the District Health officer, effectively to exercise his functions under the Public Health Act in Panchayat areas", obviously because he is not in the village. But to remedy this the Government propose to make considerable use of the Power of Delegation conferred by Section 11 to delegate the powers of the "Health Officer" to the Executive Authority of the Panchayat.

There are two aspects of the subject—one relating to the Administration of Public Health and the other relating to the Administration of Public safety.

So far as the Administration of Public Health is concerned the Madras Public Health Act III of 1939 introduced radical changes.

The Madras Public Health Act III of 1939 introduced radical changes. Where a local body has a Health officer, he is clothed with authority to exercise all the authority and discharge all the functions of the Executive authority in regard to Public Health matters, notwithstanding anything contained in the laws constituting these local bodies. The question may arise as to whether it is desirable to set aside the Executive authority and instal in his place the Health officer, who must necessarily be considered a servant of the Executive authority in a local body, or, whether the objective could not be achieved by providing for delegation by the Executive authority. Let us leave these alone for the present. Where there is no Health officer—as in the case of most Panchayats—the

administration of the whole health aspect of the village is left in the hands of the District Health officer, though sections of the Local Boards Act—122 to 153—pertaining to Public Health matters, were not specifically repealed. They become void by virtue of Section 144 of Public Health Act. Section 16 of the Public Health Act referred only to the Health officer of a local authority. The question of Panchayats that do not and cannot employ a Health officer is a question that cannot be so easily left to the District Health officer who is placed at a distance nor even his subordinates. No authority outside a local area can deal properly or adequately with the health questions of that locality. But the remedy the Government wish to apply to make good this position is not commensurate with the real magnitude of the problem. The present Bill omits all the sections of the Local Boards Act from 122 to 153. Having incorporated the provision, by an amendment to Section 16 of the Public Health Act, that the District Health officer, where the Panchayat has no Health officer of its own, may be entrusted with any function relating to any matter of Public Health which is assigned by this Bill to the Executive officer, the Government proceed practically to correct the position by saying that under Section 11 of the Public Health Act the Government will have power to delegate the powers of the Health officer to the Executive officer of the Panchayat and they expect that considerable use will be made of this power; because, as has already been mentioned, they are convinced that it will not be possible for the District Health officer effectively to exercise his functions under the Public Health Act in the Panchayat areas. Why make a provision that cannot work and take power to set it right by a remedy which is bound to be very ineffective by its very nature. In the first place the effect of the amendment of Section 16 of the Public Health Act is not so mild as is stated in the objects and Reasons. It vests the complete administration of Public Health matters of the Panchayats absolutely in the District Health officer. It is not that he "may be entrusted with any function" relating thereto. No doubt there are the words at the end of the section that that vesting is "subject to such appeal and control as the Government may by general or special order determine." With Sections 122—153 of the Present Local Boards Act omitted, it would be too far fetched to interpret these words as modifying the mandatory nature of the section. Apart from this may we ask how the Government propose to make their power under Section 11 of the Public Health Act effective in the case of Panchayats. That Section contemplates no more than this. The Government may by general or special order, authorise any officer of Government or of a local authority, to exercise such of the powers of the Health officer under this Act, in such area, and subject to such restrictions, limitations and conditions and to such control and revision, as may be specified in such order. This section contemplates only individual Government officer or any officer of a local authority. Whether the order be general or special, a class or group of officers is not contemplated. So, in the case of every Panchayat a general or a special order may have to issue, if the expressed ineffectiveness of a distant District Health officer has to be provided against. This does not appear to be practical or sensible. When the Government reserves to itself the power of restrictions, limitation and conditioning in such a matter as this, trying to consider every case on its so called merits, the

accepted general principle that a District Health officer will not find it possible effectively to exercise his functions becomes practically valueless. In actual working this position would entail grave consequences. Let us take, for example, what is contemplated in Section 24 of the Public Health Act more especially in regard to clause (*d*). The act contemplates under it matters for which more than thirty-six hours notice is not possible. Can any one maintain that the Panchayat can bring such a matter to the notice of the Government and the Government can act under Section 11 of the Public Health Act in proper time? Equally is it impossible to deal with matters contained in sub-clause (*e*) of that section and similar other matters either by a reference to the Government or to the District Health officer. Prompt steps on the spot become necessary. No Panchayat can be applying either to the Government or even the District Health officer to restrain a man from polluting water sources and the like. With extensive powers vested in the Health Department and the Collector under the Public Health Act to compel the Panchayat to do this, that and another, in relation to Public Health, it is strange that the Panchayats should be denied the sanctions to carry out in the locality what is needed of them. It looks almost tragic that the Panchayat Bill should primarily lay on the Panchayat the compulsory duty, amongst others, of :—

(1) the construction of drains and the disposal of drainage water and sullage,

(2) the cleaning of streets, the removal of rubbish heaps, jungle growth, and prickly pear, the filling in of disused wells, insanitary ponds, ditches, pits or hollows and other improvements of the sanitary condition of the village,

(3) the provision of public latrines, and arrangements to cleanse latrines whether public or private,

(4) the sinking and repairing of wells, the excavation, repair and maintenance of ponds or tanks of water for drinking, washing and bathing purposes and the construction of bathing ghats,

(5) preventive and remedial measures connected with epidemics, including vaccination,

and yet make no provision in the legislation to enforce such measures as may be necessary on the locality. The Panchayat cannot use the Public Health Act; for, that Act is the special prerogative of the Health Department.

Under these circumstances we appeal to the Government to examine the whole question afresh. We would respectfully point out that in the draft Panchayat Bill published by our Provincial Union in clause LXII indication has been made of what powers the Panchayat may enjoy in these matters. They may be examined or the Panchayat or its Executive may be declared to constitute the Health officer for its area. The Executive officers now receive training in elements of Sanitation and Public Health and so they will be able to act as subordinates to the Health officer and can be expected to administer duties pertaining to Public Health. Until some such further step is taken the position taken up by the Government

very rightly in the statement of objects and reasons that it will not be possible for the District Health officer effectively to exercise his functions under the Public Health Act in Panchayat areas cannot be solved by merely hoping that Section 11 of the Public Health Act will be used *considerably*. Bare justice to villages and their health requiries that the local authority should have ample powers and opportunities in the matter.

Taking the 2nd aspect "Public Safety" the Present Local Boards Act, provides for it in sections 148 and 149, under Chapter IX—Dangerous Structures, Trees and places. The Public Health Act did not take notice of them for they have not much connection with Health. But the Village Panchayat Bill has omitted these sections as well. While Chapter V of the proposed bill has the heading "*Public Safety*, Convenience and Health" the necessary sections corresponding to sections 147 to 156 of the Local Boards Act have not been incorporated under the chapter, thereby leaving a serious gap. We presume this might be due to sheer oversight and misapprehension that the 'Public Health Act' provided for these. We do not think much argument is necessary on the necessity to include these sections 147 to 156 in the proposed Panchayat *Bill*. It goes without saying that the Executive Authority of a Village Panchayat should be vested with necessary Administrative Powers (*i*) to require the owner of any wall or building or tree or well, which is deemed by the Panchayat to be in any way dangerous to Public Safety, to remove, or repair or cut such wall, building or tree or well; (*ii*) to destroy stray pigs or dogs suspected of Rabbies etc thereby causing danger to Public Safety; (*iii*) to require the owner of any land, or building adjoining a road or village site or latrine which is over grown with prickly-pear, or thick vegetation thereby causing danger to the public by being a hiding place to reptiles etc. to remove the same; (*iv*) to regulate the establishment, burning and manufacture of bricks so that there be no danger to the village from fire. It is a well-known matter that brick kilns are burnt very near houses, a very large majority of which are thatched ones.

The Panchayat Bill prohibits persons from doing certain acts without license if a license be necessary, or, made requisite by rules framed under the Act. There are many acts for which rules cannot be made or need not be made, but which require to be prohibited in the interests of Public Safety, such as excavating earth or sand or digging pits within a reasonable distance from roads. To meet such contingencies general administrative power is necessary and has to be provided for. We earnestly appeal to the Government to examine these aspects of the Bill and suitably provide for them in the final drafting of the Bill.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 5	அக்டோபர், 1942.	No. 7

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

தலையங்கம்.

பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் பொது சுகாதாரமும், பாதுகாப்பும்.

பஞ்சாயத்து மசோதாவுடன் வெளியிடப்பட்டிருக்கும் காரணங்களில், கவர்மெண்டார் ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தரால், அவர் கிராமவாசியில்லாத காரணத்தால், பஞ்சாயத்துகளில் சுகாதார சட்டத்தின்படி தன் கடமைகளை திருப்திகரமாக நடத்த முடியாது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக, கவர்மெண்டு 11-வது செக்ஷன்படி தன் அதிகாரத்தை உபயோகித்து சுகாதார ஆபீசரின் அதிகாரத்தை எப்போதெல்லாம் தேவையோ, அப்போது பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்கு மாற்ற உத்தேசித்திருக்கிறார்கள்.

இதில் இரண்டு விஷயங்களை கவனிக்க வேண்டும். அ. து. பொது சுகாதார நிர்வாகம், பொது பாதுகாப்பு நிர்வாகம்.

பொது சுகாதார விஷயமாய் 1931ம் வருஷத்திய சென்னை சுகாதார சட்டம் பல மாறுதல்களை எற்படுத்தியது. ஒரு ஸ்தல ஸ்தாபனத்தில் சுகாதார உத்தியோகஸ்தர் இருந்தால், பொது சுகாதார விஷயமாக எல்லா அதிகாரமும், ஸ்தல ஸ்தாபன சட்டப்படி என்ன இருந்தாலும், அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்படி நிர்வாக அதிகாரிகள் செலுத்த வேண்டிய அதிகாரத்தை, அதன் உத்தியோகஸ்தரானவரிடமே ஒப்படைப்பது விரும்பத்தக்கதா, அல்லது அந்த அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளுக்கே மாற்ற வேண்டுமா, என்ற பிரச்னை எழலாம். சுகாதார உத்தியோகஸ்தரில்லாத அநேக பஞ்சாயத்துகளில், கிராமத்தின் எல்லா சுகாதார

வேலைகளும், ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தரின் பார்வையில் இருக்கின்றன.

ஸ்தல ஸ்தாபன சட்டத்தின் 122 முதல் 153 செக்ஷன்களில் கண்ட பொது சுகாதார விஷயங்களைக் குறித்து ரத்து செய்யப்படாவிட்டாலும், பொது சுகாதார சட்டம் 144வது செக்ஷன்படி அவைகள் செல்லுபடியாகாது. பொது சுகாதார சட்டத்தின் 16வது செக்ஷன் ஸ்தல ஸ்தாபனத்தின் சுகாதார உத்தியோகஸ்தரை மாத்திரம் குறிக்கிறது. பஞ்சாயத்து சுகாதார விஷயங்களை, வெகு தூரத்திலிருக்கும் ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தருக்காவது அவரது கீழ் உத்தியோகஸ்தருக்காவது விடுவது கூடாது. ஒரு ஸ்தலத்தின் சுகாதார விஷயங்களை அந்த ஸ்தலத்திலிருக்கும் அதிகாரிகளைத் தவிற வேறு வெளியோர் எவரும் சரிவர கவனிக்க முடியாது. இதற்கு கவர்மெண்டு சொல்லும் உபாயம் இந்த குறையை சரியாக தீர்க்க முடியாது. இப்போது ஆலோசனையிலிருக்கும் மசோதா ஸ்தல ஸ்தாபன சட்டத்தின் 122 முதல் 153 வரையில் செக்ஷன்களை நீக்கியிருக்கிறது, பொது சுகாதார சட்டத்தின் 16வது செக்ஷனுக்கு ஒரு திருத்தம் கொண்டுவந்து அதன் மூலம் சுகாதார உத்தியோகஸ்தரில்லாத பஞ்சாயத்துகளில் இந்த மசோதாவில் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சுகாதார சம்பந்தமான அதிகாரத்தை ஜில்லா சுகாதார அதிகாரி கவனிக்கலாம், என்று ஏற்படுத்துவதால், செக்ஷன் 11 மூலம் கவர்மெண்டு சுகாதார உத்தியோகஸ்தரின் அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளுக்கு மாற்றலாம் என்ற ஷரத்தின்படி, முன்னமே சொன்ன காரணத்தால்—அ. து. ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர் அவருடைய மேர்பார்வையை சரிவர செலுத்த முடியாது என்பதால், நிர்வாக அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்படும் என்று கவர்மெண்டார் எதிர்பார்க்கிறார்கள். இப்படி செய்வது அனாவசியமான சிக்கல்களை யுண்டாக்கும். முதலாவது பொது சுகாதார சட்டம் 16வது செக்ஷனுக்கு செய்யப்போகும் திருத்தம் கவர்மெண்டு தெரிவித்திருப்பதுபோல் அவ்வளவு ஆக்ஷேபகர மற்றதன்று. அது பஞ்சாயத்துகளில் சுகாதார விஷயங்களில் பூரண அதிகாரத்தையும் ஜில்லா சுகாதார அதிகாரியிடம் ஒப்புவிக்கிறது. இது நிஷ்கர்ஷையானது. கவர்மெண்டு செய்யும் விதிகளின்படி இது தகுந்த கட்டுப்பாடுகளுக்கும் அப்பீலுக்கும் உட்பட்டதென்று கவர்மெண்டார் தெரிவித்தாலும், ஸ்தல ஸ்தாபன சட்டம் 122—153 செக்ஷன்கள் ரத்து செய்யப்பட்டுவிட்டால், இந்த சலுகைகள் பிரயோஜன மற்றுப்போகும். மேலும் பொது சுகாதார சட்டம் 11வது செக்ஷன்படி தங்களுக்குள்ள அதிகாரத்தை பஞ்சாயத்து விஷயங்களில் கவர்மெண்டு எப்படி அமுல் நடத்த உத்தேசிக்கிறார்கள், என்று நாம் கேழ்க்கிறோம். அந்த செகஷன், கவர்மெண்டானது பொது உத்தரவோ, பிரத்தியேக உத்தரவோ போட்டு, விதிக்கப்பட்ட நிர்பந்தங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, குறிப்பிட்ட பஞ்சாயத்துகளில், குறிப்பிட்ட கவர்மெண்டு அதிகாரிக்காவது, பஞ்சாயத்து நிர்வாக அதி

காரிக்காவது இந்த சட்டத்தின்படி சுகாதார உத்தியோகஸ்தரின் அதிகாரத்தை மாற்றலாம் என்று கூறுகிறது. அதாவது தனிப்பட்ட கவர்மெண்டு உத்தியோகஸ்தர் அல்லது ஸ்தல ஸ்தாபன அதிகாரி என்று குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. பொது உத்தரவோ, பிரத்தியேக உத்தரவோ, மொத்தமாக அதிகாரிகள் குறிப்பிடப்படவில்லை. ஆகையால், இந்த செக்ஷன் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமானால், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு பிரத்தியேக உத்தரவு போடவேண்டிவரும். இது சாத்தியமல்ல. ஒவ்வொரு பஞ்சாயத்து விஷயத்திலும் கவர்மெண்டு தீர்மானம் செய்து கட்டுப்பாடுகளை விதித்து உத்தரவு போடுவது என்றால் பொதுவாக சுகாதார உத்தியோகஸ்தர் மேல்பார்வை சரிவர செய்ய முடியாது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை அர்த்த மற்றதாகிவிடும். அமுலில் அநேக விபரீதமான கஷ்டங்கள் நேரிடலாம். பொது சுகாதார சட்டம் 24வது செக்ஷன் உபபிரிவு (டி)யை எடுத்துக்கொள்ளுவோம். அதன்படி செய்ய 36 மணி நோட்டீஸ் விதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து அந்த அவகாசத்திற்குள் ஒரு முக்கியமான விஷயத்தை கவர்மெண்டுக்குத் தெரிவித்து, கவர்மெண்டு 11வது செக்ஷன்படி சீக்கிரத்தில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுவது சாத்தியமா? அதே மாதிரி (இ) உட்பிரிவில் சொல்லப்பட்டவைகளைச் செய்யவும் சாத்தியப்படாது. அந்த இடத்திலேயே அவசரமாக செய்யவேண்டிவரும். ஜலாதாரத்தையாவது அவைபோன்ற மற்றவைகளை அசுத்தம் செய்வதைத் தடுக்க ஒரு பஞ்சாயத்தும் கவர்மெண்டுக்காவது, ஜில்லா சுகாதார ஆபீசருக்காவது எழுதிக்கொண்டிருக்க முடியாது. பொது சுகாதார சட்டத்தின்படி சுகாதார இலாகாவுக்கும், கலெக்டர்களுக்கும், பொது சுகாதார விஷயமாக பஞ்சாயத்துக்களை பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி நிர்பந்திக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பஞ்சாயத்துகளுக்கு தங்கள் தேவைகளை தாங்களே கவனித்துக்கொள்ள அதிகாரம் இல்லாமலிருப்பது விநோதம்தான். கீழ்கண்ட கடமைகளை நிர்பந்தத்தின்பேரில் மசோதாபடி பஞ்சாயத்துகள் செய்யவேண்டி ஏற்படுவதும், அ. து.

(1) சாக்கடை கட்டி, சாக்கடை தண்ணீர் சரியாக வெளியே அப்புறப்படுத்துவது,

(2) தெருக்களை சுத்தம் செய்தல், குப்பை கூளங்களை அப்புறப்படுத்துதல், நாகதாளி முதலிய காட்டு செடிகளை வெட்டுதல், பாழடைந்த கிணறுகள், குட்டைகள், தண்ணீர் தேங்கும் பள்ளங்களை மண்போட்டு மூடுதல்,

(3) பொது கக்கூசுகளும், சுத்தம் செய்ய ஏற்பாடும்,

(4) கிணறுகள் தோண்டுவது, சீர்படுத்துவது, குடிக்கவும், குளிக்கவும் இதர உபயோகங்களுக்கும் குளம், ஏரி வெட்டி, சீர்படுத்துவது, ஸ்நான கட்டங்கள் கட்டுவது,

(5) நோய்களை தடுக்கவும், போக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவது, அம்மை குத்துவது,

இதுபோன்ற கடமைகள் செய்ய வேண்டியிருந்தும் அவைகள் செய்ய வேண்டியதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள சட்டப்படி அதிகாரம் கொடுக்காதிருப்பதும், துரதிருஷ்டம் தான். அந்த பொது சுகாதார சட்டத்தை சுகாதார இலாகாதான் அமுல் நடத்த அதிகாரம் உண்டு.

இந்த நிலைமையில் எல்லாவற்றையும் நன்கு புனராலோசிக்குமாறு கவர்மெண்டை வேண்டிக்கொள்ளுகிறோம். மாகாண பஞ்சாயத்து சங்கம் பிரசுரித்துள்ள நகல் பஞ்சாயத்து மசோதா 42வது பிரிவில், இந்த விஷயங்களில் என்ன என்ன அதிகாரம் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கண்டிருக்கிறது. அவைகளை பரிசீலனை செய்யலாம். அல்லது பஞ்சாயத்தையாவது, அதனுடைய நிர்வாகஸ்தர்களையாவது அதன் எல்லையில் சுகாதார உத்தியோகஸ்தராக நியமிக்கலாம். இப்போது பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தர்கள் சுகாதாரம், பொது ஆரோக்யம் முதலிய விஷயங்களில் கொஞ்சம் பயிற்சி பெறுகிறார்கள். ஆகையால், அவர்கள் சுகாதார உத்தியோகஸ்தருக்கு அடியில் வேலையை கவனிக்கலாம்.

இந்த மாதிரி ஏதாவது செய்தால்தான், கவர்மெண்டு நியாயமாக தெரிவிப்பதுபோல அ. து. பஞ்சாயத்து எல்லையில் ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர் அந்த வேலைகளை சரிவர கவனிப்பது சாத்தியமில்லையென்று சொல்லி, பொது சுகாதார சட்டத்தின் 11வது பிரிவுபடி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை தாராளமாக உபயோகிப்பதால் இந்த நிலைமை மாறும் என்று எண்ணுவது தப்பு. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இது விஷயமாக சரியான அதிகாரங்கள் கொடுக்கவேண்டியது நியாயம். சுகாதாரத்திற்கும் நன்மை தரும்.

"பொது பாதுகாப்பு", என்னும் விஷயமாக ஸ்தல ஸ்தாபன சட்டம் 9வது அத்தியாயம் 147 முதல் 156 செக்ஷன் வரையில் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த அத்தியாயத்தின் தலைப்பு "அபாயகரமான கட்டடங்கள், செடிகள், இடங்கள்" என்பது. பொது சுகாதார சட்டத்தில், இவை சுகாதார விஷயங்கள் இல்லையென்ற காரணத்தால், இவைகளைக் குறித்து பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் கிராம பஞ்சாயத்து மசோதாவும் இவைகளைக் குறித்து பிரஸ்தாபிக்கவில்லை. மசோதாவின் 5வது அத்தியாயத்தின் தலைப்பு "பொதுஜன காப்பு, சௌகர்யம், ஆரோக்யம்" என்று போடப்பட்டிருந்தபோதிலும், அவைகள் விஷயமாய் ஸ்தல ஸ்தாபன சட்டத்தின் 147 முதல் 156 வரையில் கண்டிருக்கும் செக்ஷன்கள் இதில் இல்லை. இது ஒரு பெரிய குறை. இது கவனப்பிசகாலும், பொது சுகாதார சட்டத்தில் இதற்கு வேண்டிய செக்ஷன்கள் இருக்கும் என்ற நம்பிக்கையாலும், விடப்பட்டிருக்கும் என்று நம்புகிறோம். இந்த 147 முதல் 157 செக்ஷன் வரையில் கண்டிருக்கும் அதிகாரத்தைக் குறித்து பஞ்சாயத்து மசோதா

வில் சேர்க்கவேண்டிய அவசியத்தைப்பற்றி நாம் அதிகம் வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை.

பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்கு அடியில் கண்ட அதிகாரம் கொடுக்கவேண்டும் என்பது தெளிவு. அ. து.

(i) பொது ஜனங்களுக்கு அபாயம் நேரிடும்படியாக இருக்கும் சுவர், கட்டடம், மரம், கிணறு இவைகளை எடுத்து விடவோ, சீர்திருத்தவோ, வெட்டவோ அதிகாரம்;

(ii) பொது ஜனங்களுக்கு ஆபத்து ஏற்படும்படி யிருக்கும் பன்றி, நாய் இவைகளை கொல்லவும்;

(iii) ரோடுக்காவது, பொது மனைக்காவது, கக்கூசுக்காவது அருகில் இருக்கும் நிலம் அல்லது கட்டட சொந்தக்காரர்களை அவர்கள் நிலத்தில் பரவியிருக்கும் நாகதாளி முதலிய பொதர்களால், பாம்பு முதலிய பலவித அபாயம் ஏற்படு மாதலால், அவைகளை வெட்டி யெறியும்படி நிர்பந்திக் கவும்;

(iv) செங்கல் சூளை போடுவது விஷயமாய் கிராமத்தில் நெருப்பு பிடிக்க ஆபத்தில்லாமல் தகுந்த பந்தோபஸ்துகள் செய் யும்படி நிர்பந்தம் செய்யவும் அதிகாரம் வேண்டும். ஏனென்றால் கீத்துபோட்ட வீடுகளின் அருகாமையில் சூளைகள் போடப்படுகின்றன.

பஞ்சாயத்து மசோதாவின் ஷரத்துகளின்படி சில காரியங்கள் செய்ய லைசன்சு வாங்கவேண்டும். ஆனால் அநேக விஷயங்களைக் குறித்து விதிகள் விதிக்க இயலாது. அ. து. மண் வெட்டி வெளியில் போடுதல், சாலைகளுக்கு அருகில் பள்ளம் தோண்டுதல் போன்றவை. இவைகளுக் காக பொது நிர்வாக அதிகாரம் தேவை. அவைகளை சேர்க்க வேண்டும். மாகாண பஞ்சாயத்து சங்கத்தின் நகல் மசோதா 62வது செக்ஷனைக் கவனிக்கவும்.

இவைகளை யெல்லாம் ஆலோசித்து ஏற்படப்போகும் சட்டத்தில் தகுந்தபடி சேர்க்குமாறு கவர்மெண்டை மிகவும் வேண்டிக்கொள்ளு கிறோம்.

கிராம அபிவிருத்தி.

(தொடர்ச்சி.)

(R. காலேடி, M.A., I.C.S.)

4-ம் பாகம்—ஆரம்பித்தல்.

அந்த அந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் ஜலாதாரம், கிராம ரஸ்தாக்கள், கிராம சுகாதாரம் இவைகளை சீர்படுத்த அவர்களால் இயன்றதைச் செய்வார்கள். ஐக்ய சங்கங்கள் ஏற்படுத்தவும் முயற்சிப்பார்கள். அது விஷயமாக சில யோசனைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

1.—நீர்பாசன விருத்தி.

பொது மராமத்து இலாகா அடிக்கடி ஜல சப்ளையை சீர்படுத்தியும், விருத்தி செய்தும், புது திட்டங்களை ஏற்படுத்தியும் வருகிறது. குடிகள் சொல்லும் யோசனைகள் பரிசீலிக்கப்பட்டு சாத்தியமான வரையில் கையில் பணம் இருந்தால், அனுஷ்டிக்கப்படுகின்றன. ஆனால் குடிகள் அவர்கள் செய்யவேண்டிய குடி மராமத்தை செய்வதில்லை. அவர்களுக்கு பயனளிக்கும் வேலைகள் செய்ய உண்டாகும் செலவை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஒவ்வொரு அயாகத்தாரும் தன் கடமையைச் செய்யாவிட்டால், எல்லா அயாகத்தும் நஷ்டமடையும். ஆகையால் ஒவ்வொரு ஜலாதாரத்தின் கீழ் இருக்கும் அயாகத்தாரும் ஒரு நீர்பாசன பஞ்சாயத்து ஏற்படுத்தி, அவரவர்களுடைய நில விஸ்தீரணத்திற்கேற்ப கட்டணம் விதித்து, குடி மராமத்து வேலையை சரிவர கவனித்து, கவர்மெண்டு செய்யவேண்டி வரும் பெரிய ரிப்பேர் வேலைகளுக்குண்டான செலவு தொகையை பங்கிட்டுக் கொள்ளலாம். அப்போது அந்த செலவு தொகை இல்லாத காரணத்தால் கவர்மெண்டு அந்த வேலையை துவக்காமல் இருக்கமாட்டார்கள்.

2.—கிணறு பாய்ச்சல் அபிவிருத்தி.

சில இடங்களில் தண்ணீர் சுலபமாக அதிக ஆழமன்னியில் கிணறு வெட்டி எடுக்கக்கூடியதாக இருக்கிறது. அந்த இடங்களில் கிணறுகளை சுலபமாக வெட்டி காப்பாற்றலாம். பயிருக்குத் தேவையான, சுலபமாக வெட்டக்கூடிய, கிணறுகள் இன்னும் வெட்டப்படவில்லை. அது காரணம்பற்றி அநேக நிலங்களில் லாபமற்ற புஞ்சை பயிர் செய்யப்படுகிறது. கவர்மெண்டாரிடமிருந்து குடியானவன் கடன் வாங்க அஞ்சுவதாகத் தோன்றுகிறது. ஆனால், கிணறு வெட்டப்போகும் இடத்தை ஜாக்கிரதையாக பொறுக்கி யெடுத்து, கடன் தொகையை நியாயமாக செலவு செய்தால், கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய அவகாசம் கொடுக்கப்படும். தற்சமயம் வட்டி விகிதம் கொஞ்சம்தான்.

3.—எருவு அபிவிருத்தி.

அநேக கிராமங்களில் சாணியை வெய்யிலுக்கும், காற்றுக்கும், மழைக்கும் படும்படியாக குவித்து வைக்கப்படுகிறது. இப்படி வைப்பதால் அதில் கிடைக்கும்

எருவு சத்து மறைந்து போகிறது. ஒரு சிறிய குழி தோண்டி, அதில் கொஞ்சம் வைக்கோல் சத்தைகளை போட்டு, அதில் சாணியை போட்டு மூடி வைப்பது சுலபம். அப்போது சத்துகள் கெடாது. இந்தக் குழிகளை புழக்கடைகளிலோ தோட்டத்திலோ, அல்லது பொதுவாக உபயோகப்படாத பொரம்போக்குகளிலாவது கிராம பொது மனைகளிலாவது தோண்டலாம். இந்த மாதிரி பத்திரம் செய்துவைக்கப்பட்ட சாணி, மற்ற எருவு வகைகள் நன்றாய் உலராத வரட்டியைக் காட்டிலும் பயனளிக்கும். எல்லா மாட்டுத் தொட்டில்களிலும் உலர்ந்த மண் தூவினல், அது மூத்திரத்தையும் சாணியுடன் சேர்த்து வைக்கிறது. அப்போதைக்கப்போது அதை அப்புறப்படுத்தி, குழிகளில் சேகரித்து வைத்தால், முதல்தரமான எருவாகிறது. ஆனல் எல்லாவற்றையும்விட மேன்மையான எருவு "பெட்டி" (Loose Box) முறை எனப்படும் முறையால் கிடைக்கிறது. இதன்படி, மாடுகளை ஒரு மூடின கொட்டிலில் கட்டவேண்டும். அதன் தரையில் அடர்த்தியாக வைக்கோலேயும், இலே சத்தைகளையும் பரப்பி வைக்கவேண்டும். மூத்திரம், சாணி, இவைகளை இந்த பரப்பி யிருக்கும் வைக்கோல் இழுத்துக்கொள்ளுகிறது. மாடுகள் அதை மிதித்து மிதித்து நடப்பதால் சாணி நன்றாக அத்துடன் கலந்து விடுகிறது ஆகையால் அது சுத்தமாகவும், துர்நாற்றமற்றும் இருக்கிறது. அதை அநேக வாரங்கள், மாதங்கள்கூட, அப்புறப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லே.

4.—மேன்மையான விதைகள்.

நல்ல விளைவு கிடைக்க பயிருக்கு சுத்தமானதும் மேன்மையான ரகமானதுமான விதையை உபயோகிக்க வேண்டும். இவைகள் கவர்மெண்டு விவசாய பண்ணைகளிலும், விவசாய இலாகா டெமான்ஸ்ட்ரேடரிடமும் கிடைக்கும். கிராமத்தில் விவசாய அபிவிருத்தி அல்லது மேன்மையான பயிர் செய்யும் சங்கம் ஸ்தாபித்தால், அது அந்த பிரதேசத்திற்கேற்றதான நல்ல விதைகளை வாங்கி விநியோகிக்க சௌகர்யமாக இருக்கும். அது ஒரு விதை பண்ணையையும் நடத்திஞலும், அதில் சுத்தமான விதை போட்டு பயிர் செய்து, அதன் சாகுபடி பூராவும் விதைக்காக உபயோகிக்க விநியோகிக்கலாம். மேலும் ஒவ்வொரு குடியானவனும் தன் நிலங்களில் பயிராகும் செடியிலிருந்து செழிப்பானதை பொறுக்கி, அதனுடைய விதையையே உபயோகிக்கலாம்.

5.—மேன்மையாக உழுதல்.

பயிர்களுக்கு தகுந்த காற்றும், பூமிக்கு ஈறத்தை சேர்க்கும் சக்தியை கொடுக்க, நிலம் சரியாக உழப்பட வேண்டும். பூமியானது 5, 6 அங்குலம் ஆழம் வரையில் நன்றாக தூள்தூளாக மண் கரையும்படி உழப்பட வேண்டும். லேசாக உழுது, மண் கட்டி கட்டியாய் அங்கங்கே தென்பட்டால் போதாது. இப்போது சொற்ப தொகைக்கு, பலமற்ற மாடுகள்கூட இழுக்கக்கூடிய இரும்பு கலப்பைகளை குடியானவன் வாங்கலாம். அவை மரக்கலப்பைகளைக் காட்டிலும் நன்றாக உழுகின்றன. குடியானவனுக்கு அவை வாங்க சகாயம் செய்ய கவர்மெண்டார் சிறிய பிரத்தியேக கடன் தொகை கொடுக்கிறார்கள். அப்படிகூட தனிப்பட்ட குடிகள் இவைகளை வாங்க இயலாவிட்டால், கொஞ்சம்பேர் சேர்ந்து கூட்டாக வாங்கி முறையே உபயோகிக்கலாம்.

6.—மேன்மையான கால்நடைகள்.

எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் நல்ல ஜாதி பொலி எருதுகளை வைக்க இப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது. இதில் இன்னும் என்ன என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாக தெரியவில்லை. ஆனால் குடிகள் மேன்மை பயிர் சங்கங்கள் ஸ்தாபித்து, பொலி எருதுகளை காப்பாற்றி, சினைக்கு உபயோகப் படுத்துவார்களானால், பணக்கார நிலச்சொந்தக்காரர்களும், ஜில்லா போர்டுகளும், அப்போது பொலி எருதுகளை இனமாகக் கொடுக்க முன் வருவார்கள். வருஷத் திற்கு இத்தனை பசுக்களுக்கு உபயோகப்படுத்தும், பொலி எருதுகளை வைத்து காப்பாற்றுபவர்களுக்கு கவர்மெண்டார் வருஷத்திற்கு உசிதமான தொகையை கொடுக்க அனுமதிப்பார்கள். அப்படி கொடுக்கப்படும் தொகை யன்னியில்கூட, அதனால் கிடைக்கும் நல்ல கன்றுகளின் விலை மதிப்பே, எல்லா செலவு தொகையை யும் சீக்கிரத்தில் ஈடு செய்துவிடும். அது லாபத்தையே தரும். அப்படி கால் நடைகள் அபிவிருத்திக்கு பாடுபட சோம்பேறித்தனமாக இருந்தால், அவைகளுக்கு நல்ல தீனிபோட்டு, நல்ல கொட்டில்களாவது கட்டி அவைகளின் நிலமையை விருத்தி செய்யலாம்.

கால்நடைகள் சௌகர்யமாக இருக்கும்படி கொட்டில்கள் கட்டினால், அவை கள் வியாதி யன்னியில் அதிக காலம் ஜீவித்திருக்கும். வேலை செய்யும் எருது களுக்கு தகுதியற்ற கொட்டில்கள் கட்டுவதாலும், சரியாக தீனிபோடாவிட்டாலும், நஷ்டமே ஏற்படும். அவைகளின் ஆயுசும், வேலை செய்யும் சக்தியும் அவைகளின் போஷாப்பில் இருக்கிறது. கால்நடைகளுக்கு சரியாக தீனிபோட்டு போஷித் தால், அடிக்கடி கால்நடைகள் வாங்க குடியானவன் செலவு செய்யவேண்டிய பணம் மிச்சப்படும். ஏனெனில் அவை நெடுநாள் ஜீவித்து, பாடுபட்டு உழைக்க சக்தியுள்ளதாக இருக்கும். தீனிக்கு வேண்டிய பிரத்தியேக தீனிப்பயிர்கள் செய் வது நல்லது. நல்ல தீனி போடப்பட்ட மாடுகள் மேன்மையாக உழுகின்றன. அப்போது ஆகார பயிர் விளைச்சலும், அதிகப்படுகிறது. பூமியின் செழுப்புத் தன்மையை விருத்தி செய்ய அநேக தீனிப்பயிர்கள் இருக்கின்றன. ஆகையால் ஆகாரப் பயிர்களுக்குப்பதில் தீனிப்பயிர்கள் செய்வதால் ஏற்படும் நஷ்டம், அதிக விளைச்சலால் ஈடு செய்யப்படுவதுடன், பசுக்கள் அதிக பாலைக் கொடுக்கவும் செய் கின்றன. எல்லா ஆகாரத்தைக் காட்டிலும், பால் மிக மேன்மையானது. இந்த மாதிரி இதர தேசங்களில் நடந்திருக்கிறது.

7.—கவர்மெண்டு காடுகளையும் இதர காடுகளையும் காப்பாற்றுதல்.

குன்றுகளிலும், அவைகளின் அடிவாரங்களிலும் செடி கொடிகளை விருத்தி செய்ய கவர்மெண்டு மிகவும் பாடுபடுகிறது. ஆனால் குடியானவன் அதில் சகாயம் செய்வதற்கு பதிலாக, அதை நாசம் செய்ய முயற்சிக்கிறான். இதன் விளைவாக, மரங்கள் வளர்ப்பு குறைந்து போகின்றன. மழை ஜலம் தங்கு தடையின்றி அதிக வண்டலை சேர்த்துக் கொண்டு ஏரிகளில் விழுகிறது. மரங்களின் இலைகளில் தடைப்பட்டு, மெதுவாக நீர் பாசன ஆதாரங்களில் சேரு வதில்லை. இந்த மாதிரி ஏரிகள் மண்ணடைந்து இரண்டாவது பயிர் செய்ய தண்ணீர் போதாமல் போகின்றன. விறகுக்கு வேண்டிய மரமும் குறைந்து போகிறது. சில இடங்களில் எருவுக்கு பச்சிலை தழை அகப் படுவதில்லை. குன்றுகளில் மழை ஜலத்தை தடுத்து சரிவர பாயச்செய்ய மரம், செடி

கொடிகள் விருத்தியாகவும், விறகுக்குத் தேவையான மரம் கிடைக்கவும், பச்சிலை தழை தாராளமாக கிடைக்கவும், எல்லா காடுகளையும் பாதுகாத்து அவைகளை விருத்தி செய்யவேண்டும். குடியானவன் தன் ஆடுகளை செடி கொடிகளை மேய்த்து விடும்படி விடக்கூடாது. காடுகளில் தான் குற்றம் செய்யாமல் இருப்பதோடல்லாமல், மற்றவர்கள் செய்வதையும் தடுக்கவேண்டும். ஒரு கிராமத்து குடிகள் வெளிக் காடுகளை பாகங்களாகப் பிரித்து முறைப்படி ஒரு பாகத்தை 2, 3, வருஷங்கள் மேய்க்காமல் பாதுகாத்து வந்தால், அடர்த்தியாக மரங்கள் வளரும். சிறிய சிறிய செடிகளாகவே நின்றுக் கொண்டிருக்காது. ஒவ்வொரு கிராமத்திலும் இதற்காக தனிப்பட்ட காட்டு பஞ்சாயத்து ஏற்படவேண்டும்.

8.—மரம் நடுதல்.

இதனுல் ஏற்படும் சிரமமும் செலவும் சொற்பம். ஆனுல் அதன் அனுகூலங்கள் அதிகம். மழை பெய்தவுடன், ஒரு குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு குடியானவனும் ஒரு செடியையாவது நடவேண்டும். முன்னதாகவே விதை சேகரித்து, குழிகள் தயார் செய்யப்படவேண்டும்.

மண்ணுடன் கொஞ்சம் எருவாவது சாம்பலாவது கலக்கவேண்டும். பள்ளத்தை ரொப்பும்போது, திட்டாக தண்ணீர் தேங்கி விதையை அழுகடிக்கக் கூடிய சிறிய பள்ளங்களில்லாமல் செய்யவேண்டும். ஒரு முள்வேலி சுற்றிலும் போட்டு, செடியை ஆடு மாடுகள் மேய்த்துவிடாமல் காப்பாற்றவேண்டும். வெயில் அதிகமாக இருந்தால், கொஞ்சம் நிழல்போடவேண்டும்.

9.—சந்துகள் போடுதல்.

கிராமத்தில் மண்ணும், தண்ணீரும் தங்கியிருக்கும் சந்துகளை கற்கள் போட்டு சமப்படுத்தவேண்டும். கிராமத்தார்கள் ஒன்று சேர்ந்து கற்களை சேகரித்து, வண்டிகளில் கொண்டுவந்து கூலியாட்கள் வைத்து அதற்காக தேவைக்கு ஒரு சிறிய தொகை சேகரித்து, இந்த வேலையை வெளியார் உதவியன்றி தாங்களே செய்துக் கொள்ளலாம்.

10.—ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்துதல்.

சந்துகள் அகலமாகவும் நேராகவும் இருக்கவேண்டும். ஆனுல் தனிப்பட்டவர்கள் எப்போதும் பொது ஜனங்களுக்கு இடைஞ்சலாக ஆக்கிரமிப்பு செய்கிருர்கள். அவைகளைக்குறித்து ஆக்ஷேபித்தாவது அதிகாரிகளின் கவனத்திற்காவது கொண்டுவர ஒருவரும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதில்லை. ஒவ்வொருவரும் தான் ஆக்கிரமிப்பு செய்யாமலும், தன் சமீபமுள்ளவர்கள் செய்யாமலும் பார்த்துக் கொண்டு, அப்படி யாராவது செய்தால் அதை மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திஞல், தெருக்கள் அகலமாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

11.—கிராமத்தை சுத்தப்படுத்துதல்.

கிராமத்தார்கள் குப்பையை ஒரு தனி இடத்தில் தான் போடவேண்டும். பொது இடங்களிலெல்லாம் போட்டு கெடுதல் உண்டாகும்படி செய்யக்கூடாது. அப்படி தாறுமாருய் யாராவது போடுவதைப் பார்த்தால் அதைக் கண்டிக்கவேண்டும். கிராமத்தார்கள் கூடும் போதெல்லாம், எப்படி எப்படி கிராமத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றியும், தங்கள் அக்கம் பக்கங்களை சுத்தமாக வைத்துக்கொள்ளாமல் அசுத்தம்செய்பவர்களை எப்படி சீர்படுத்தலாம் என்பதைப்

பற்றியும், விவாதிக்கவேண்டும். தெருக்களுக்கும், வீடுகளுக்கும் அருகாமையில் எருவுகள் இல்லாமல், கொஞ்சம் தூரத்தில் ஒரு பிரத்தியேக இடத்தில் வைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். கிணறுகளின் சுற்றுப்பக்கங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சாக்கடை ஜலத்தையும், மழை ஜலத்தையும் அடித்துக் கொண்டு போக, ஜலதாரைகள் கட்டவேண்டும் இதற்கு அதிக செலவு பிடிக்காது. எல்லாரும் ஒன்று சேர்ந்து, ஒரு சிறிய கட்டணம் வசூலித்து கூலியாட்கள் சேர்த்து தாங்களே செய்யலாம். ஒவ்வொரு வீட்டிற்குள்ளேயும் மிக சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். அசுத்தமாக வைத்திருக்கும் வீட்டுக்காரர்களை பொது ஜனங்கள் கண்டிக்கவேண்டும். வீடுகளையும் குடிசைகளை சுண்ணாம்பு பூசி, சக்திக்கேற்றபடி சீர்படுத்தவேண்டும். வருஷத்திற்கு ஒரு நாள் வீடு சுத்தம் செய்யும் நாளாய் ஏற்பாடு செய்து, சுத்தம் செய்தால், கிராமம் அழகாய் தென்படும். சக்தியற்றவர்களின் சகாயத்திற்கு ஒரு பொது நிதி ஏற்படுத்தி சுத்தம் செய்யச் சொல்லலாம்.

12.—மேன்மையான வண்டி ரஸ்தாக்கள்.

ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு நல்ல சாலையை ஏற்படும்படி செய்ய கவர்மெண்டுக்கும் ஜில்லா போர்டுக்கும் வெகு நாட்கள் பிடிக்கும். தற்சமயம் இப்போதிருக்கும் வண்டி சாலைகள் தான் உபயோகப் படுத்தபட வேண்டும். ஆனால் கொஞ்சம் ஐக்யமாக பாடுபட்டால், அவைகளை மிகவும் சீர் படுத்தலாம். ஆரம்பமாக, கிராமத்தார்கள் ஒன்று கூடி, ஒரு தொகை வசூல் செய்து கூலியாட்கள் கொடுத்து முக்கியமான வண்டிபாதைகளில் கல் முதலியவைகளை அப்புறப்படுத்தி, மேடுபள்ளங்களை சரிப்படுத்தினால், மாட்டுவண்டி பிரயாணம் அவர்களுக்கும், அவர்களுடைய எருதுகளுக்கும் மிகவும் சௌகர்யமாக இருக்கும். எருதுகள் புண்களால் அவஸ்தைபடாமல், அதிக நாள் பலமுடன் ஜீவித்து, அதிக பளுவை வேகமாக இழுக்கும். 50 வண்டிக்காரர்கள் மாதம் ஒன்றுக்கு 10 கஜம் சீர்படுத்தினால், 3 மாதத்தில் ஒரு மைல்தூரம் ரஸ்தா சீர்படும். மாதம் ஒன்றிரண்டு நாட்கள் சிரமப்பட்டுவேலை செய்தால், ஒரு வருஷத்தில் பல மைல் ரஸ்தாக்கள் சீர் செய்யலாம்.

கவர்மெண்டு ஆதரவில் 1940-41 வருஷத்தில் வயது வந்தவர்கள் கல்வி திட்டம்.

கல்வி இலாகா டைரக்டரின் யாதாஸ்தில் பின் கண்டவைகள் காணப்படுகின்றன.

1. வயது வந்தவர்கள் கல்வி வகுப்புகள் அடியில் கண்ட ஸ்தலங்களில் நடந்தன.

(1) ராஜமஹேந்திரபுரம் ட்ரெயினிங் காலேஜ்.

(2) ராஜமஹேந்திரபுரம் உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் பள்ளிக்கூடம்.

(3) லேடி வில்லிங்டன் ட்ரெயினிங் காலேஜ்.

(4) சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ்.

(5) ராமநாதபுரம் உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் பள்ளிக்கூடம்.

(6) ராமநாதபுரம் உபாத்தியாயினிகள் ட்ரெயினிங் பள்ளிக்கூடம்.

(7) பாலக்காடு விக்டோரியா காலேஜ்.

2. அடியில்கண்ட இடங்களில் நடந்துவந்த வகுப்புகள் மூடப்பட்டன.

(1) ராஜமஹேந்திரபுரம் ஆர்ட்ஸ் காலேஜ்.

(2) பெஜவாடா உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் பள்ளிக்கூடம்.

(3) சித்தூர் ட்ரெயினிங் பள்ளிக்கூடம்.

(4) கண்ணனூர் ட்ரெயினிங் பள்ளிக்கூடம்.

(5) கும்பகோணம் கவர்மெண்டு காலேஜ்.

3. சென்னை பிரசிடென்சி காலேஜ், க்வீன் மேரிஸ் காலேஜ் வயது வந்தவர்கள் கல்வி வகுப்புகளை சமூக சேவையாக நடத்தின.

4. பாலக்காடு கவர்மெண்டு விக்டோரியா காலேஜ் நடத்திய வகுப்புகளை இராப்பள்ளிக்கூடங்களாக இலாகா அங்கீகரித்தது. சாயந்திரம் முறையாக வகுப்புகள் நடத்தப்பட்டன. லாண்டர்ன் படங்கள் காண்பிக்கப்பட்டன. உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெறும் மாணவர்கள், வகுப்புகளுக்கு ஆசிரியர்கள்.

செலவு தொகை அநேகமாக பயிற்சிபெறும் மாணவர்களும், உபாத்தியாயர்களும் தாங்களாக இஷ்டப்பட்டு கொடுத்து உதவிய கட்டணம் தான். தலைச்சேரி, தர்மாவரம், ப்ரொதத்தூர், உடுமலைப்பேட்டை, தஞ்சாவூர், ஈரோடு, வேலூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, இந்த ஊர் முனிசிபல் கௌன்சல்களுக்கு வகுப்புகள் நடத்த அனுமதி கொடுக்கப்பட்டது.

மேற்கு கோதாவரி, திருநெல்வேலி ஜில்லா போர்டுகள் வயது வந்தவர்கள் கல்வி ஸ்தாபனங்கள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டன. தூத்துக்குடியில் ஸ்திரீகளுக்கு வகுப்பும் அனுமதிக்கப்பட்டது.

சிதம்பரம், பாளையங்கோட்டையிலிருந்து மூன்று ஸ்திரீகள் வகுப்புகள், இவை மூடப்பட்டன.

திண்டுக்கல், பொள்ளாச்சி, கள்ளிக்கோட்டை, உடிபி முனிசிபல் சபைகளும், ராமநாதபுரம் ஜில்லா போர்டும், மேல்கொண்டு நடத்த அனுமதி கேட்கவில்லை. ஒரு வேளை போதிய எண்ணிக்கை மாணவர்கள் கிடைக்காத காரணமாக இருக்கலாம். ஆரம்பக் கல்விக்கு போதிய செலவு தொகைக்கு ஏற்பாடு செய்யாத ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வயது வந்தவர்கள் கல்வி விஷயமாய் செலவு செய்வதைப் பற்றி அதிக கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதிக பஜ்ராவும், ராகியும் சாப்பிடுங்கள்.

சண்டை காரணமாக பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசி நின்று விட்டது. தேவையான அரிசி இப்போது உற்பத்தியாவதில்லை. ஆகையால் மாகாண கவர்மெண்டுகள் ஜனங்களை அதிகமாக சோளம், கம்பு, கேழ்வரகு, முதலியவைகளை உட்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வண்டிகளையும், போட்டுகளையும் அதிகமாக உபயோகியுங்கள்.

சண்டை காரணமாக ரயில் போக்குவரத்து கொஞ்சமாகி விட்டது. ஆகையால் ஜனங்கள் வண்டிகளையும், போட்டுகளையும் அதிகமாக உபயோகப்படுத்தும்படி தூண்டப்பட வேண்டும். ஒவ்வொரு இடத்திலிருந்தும் போக தொடர்ச்சியாக வண்டிகள் போக்கு வரத்தை ஏற்படுத்தும்படி மாகாண கவர்மெண்டுகள் கேட்கப்பட்டுள்ளன.

குத்தகைக்கு ரயில் பொரம்போக்குகள்.

மதராஸ் தென் மராட்டா ரயில் கம்பெனியார் தங்கள் பொரம்போக்கு நிலங்களை, தங்கள் வேலைக்கு குந்தகம் ஏற்படாமல், சாகுபடி செய்ய குத்தகைக்கு விட சம்மதித்திருக்கிறார்கள். 1352 முதல் 3 பசலிகளுக்கு தயார் செய்யவேண்டிய கௌல்களை மாகாண கவர்மெண்டுகள் தயார் செய்யும். அவைகளில் ஆகாரப் பயிர்கள் தான் பயிர் செய்யலாம். நியாயமான வாடகைதான் விதிக்கப்படும். ரெவினியூ அதிகாரிகளுக்கு அங்கங்கே விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

செய்தித் திரட்டு.

1942 செப்டம்பர் மாதம் முடிய மாகாண பொது ஆரோக்ய நிலமை.

காலரா—நோய்கண்டவர்கள்		...	1409	மரணம்	732
வைசூரி	,,	...	75	,,	23
ப்ளேக்	,,	..	40	,,	2

காலரா மேற்கு கோதாவரி, குண்டூர், நெல்லூர், தென்னுற்காடு, கடப்பை, அனந்தபூர் ஜில்லாக்களில் மும்மரமாகவும் விசாகப்பட்டிணம், கர்நூல், பெல்லாரி, வட ஆற்காடு, கிருஷ்ணு ஜில்லாக்களில், கொஞ்சமாகவும், சேலம், தஞ்சாவூர், திருச்சி ஜில்லாக்களில் இல்லாமலும், ஏதோ ஒன்று இரண்டு கேசுகள் கிழக்கு கோதாவரியிலும் செங்கல்பட்டிலும் இருந்தது.

* * * *

அகில இந்திய ஸ்தல ஸ்தாபன இலாகா மகாநாடு.

ஷை மகாநாடு டில்லியில் நவம்பர் மாதத்தில் அகில இந்திய ஸ்தல ஸ்தாபன சங்கதிதாரால் கூட்டப்படும்.

* * * *

வங்காளத்தில் கிராம புனருத்தாரணம்.

''மண்ணெண்ணை கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், நாம் ஜனங்களுக்கு கல்வி புகட்டவேண்டும். வயது வந்தவர்களுக்கு கல்விவகுப்புகள் நடத்தப்பட வேண்டும். அவசியமானல் பகலில் வாரம் இருமுறையோ, மூன்று முறையோ நடத்தியாக வேண்டும்.'' இந்தவிதமாக வங்காள கிராம புனருத்தாரண டைரக்டர் வற்புறுத்தி, வலுத்த பிரசாரம் துவக்கியிருக்கிறர். எல்லா யூனியன், கடன் சமரச போர்டு, பிரசிடெண்டுகளுக்கும், கல்வி ஸ்தாபனங்களின் தலைவர்களுக்கும், மற்ற பிரமுகர்களுக்கும் 14 பாயிண்டுகள் கொண்ட ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறர். அவைகளில் முக்கியமாககுறிப்பிட வேண்டியவை : வங்காள கிராம வாசியின் சராசரி வருமானத்தை 2-8-0 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக்கவழிகளும், கடன் பளுவை குறைக்கவும், கல்வி பரவச்செய்யவும், வைத்திய வசதி, சுகாதாரம் இவைகள் அபிவிருத்தி செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.,

* * * *

பம்பாயில் வயது வந்தவர்கள் கல்வி.

கல்வி பயின்ற வயது வந்தவர்கள் தங்கள் கல்வியை விருத்தி செய்யவும், கிராம வாசிகளுக்கு உபயோகமான செய்திகள் விநியோகிக்கவும், பம்பாய் கவர்மெண்டார் உபயோகமான விஷயங்கள் அடங்கிய ஒரு பத்திரிகையை இரண்டு வாரத்திற்கு ஒரு முறை பிரசுரிக்க நிச்சயத்திருக்கிறர்கள்.

* * * *

மைசூரில் 3 லக்ஷம் அனுமதி.

உள்ளூர் கிராம போக்கு வரத்துகளை விருத்தி செய்ய மைசூர் கவர்மெண்டு பட்ஜட்டில் 3 லக்ஷம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நிஜாம் ராஜ்யத்தில் பஞ்சாயத்துகள்.

அரிசியல் சீர்திருத்தங்களுக்கு அடிப்படையாக ஒரு பஞ்சாயத்து ஏற்பாட்டை நிஜாம் கவர்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு ஆர்டினன்ஸ் (Ordinance) பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குள் நிஜாம் ராஜ்யத்தில் 1000 பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென உத்தரவாகியிருக்கிறது.

*   *   *

சென்னை மாகாணத்தின் பல ரக பூமியின் செழிப்புத் தன்மையை அதிகப்படுத்த வழி.

ஒவ்வொரு பயிரும் பூமியிலிருந்து ஒவ்வொரு விதமான ஆகார சத்தை வெவ்வேறு அளவுக்கு இழுத்துக்கொள்ளுவதால், பூமியின் செழிப்புத் தன்மையையும் பராமரிப்பையும் கவனமாக விருத்தி செய்யவேண்டும்.

உதாரணமாக, அடியில்கண்ட முறைகளை குடியானவனுக்குத் தெரிவிக்கலாம்.

1. கால்நடைகளின் சாணியை அதிகப்படுத்தவும், இன்னும் உபயோகமுள்ளதாகவும் செய்யவேண்டும். கால்நடைகளின் மூத்திரம் ஒரு சொட்டுக்கூட விடாமலும், எல்லா சாணியையும் இதர வஸ்துக்களையும் நிலத்தில் சேரும்படி செய்யவேண்டும்.

2. பூமியிலுள்ள எருவு சத்துக்களை விருத்தி செய்யவேண்டும். இது கால்நடைகளின் சாணியை உபயோகிப்பதாலும், நஞ்சை புஞ்சை நிலங்களில் பச்சை எருவு தழை பயிர்களை மாமூல் பயிர்களுடன் மாறி மாறி செய்து, அவைகளுடன் நிலத்தை உழுவதால் ஏற்படுகிறது. நிலம் காய்ந்துபோய் உழுவது கஷ்டமாக இருந்தால், அந்த பயிரை அறுத்து சேகரித்து வைத்து பின்னிட்டு உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு எருவு சத்தும், மிருதுவாயிருந்தாலும், கடினமாக இருந்தாலும், சேகரித்து வைக்கவேண்டும். புஞ்சை நிலங்களுக்கு கால்நடை சாணியையும் ஷை எருவு சேகரிப்பையும், நஞ்சைகளுக்கு பச்சை எருவு தழைகளையும் உபயோகிப்பது உசிதம்.

3. பூமியை, முக்கியமாக புஞ்சை நிலங்களை மண் அடித்து போவதிலிருந்து தடுக்க வேண்டும். இதற்காக அதற்கு கரை கட்டுவது, பள்ளமாக உழுவது, வரிசையாக உயரமாயும், பரவியும் பயிராகும் பயிர்களை வரிசையாக விதைப்பது, தண்ணீர் தேக்கத்தை வெளியேற்ற பாதைகள் வெட்டுவது முதலியவைகள் செய்ய வேண்டும்.

4. எலும்பு தூள் போன்ற சரசமாக கிடைக்கக்கூடிய எருவுகளை உபயோகித்து பூமியின் செழுப்புக்காக இருக்கவேண்டிய பாஸ்படிக் சத்தின் அம்சத்தை நிலைத்திருக்கும்படி செய்யவேண்டும். இதற்காக, கால்நடை சாணி எருவின் நடுநடுவில், 10 வண்டி எருவுக்கு ½ மூட்டை அல்லது 56 பவுண்டு எலும்பு தூளை தெளிக்க வேண்டும். எருவு பள்ளத்தை வெயில், மழையிலிருந்து காப்பாற்ற வேண்டும். இந்தப்படி செய்வது சாதாரண குடியானவனுக்கு சாத்தியமானது தான். அப்படி பண சகாயம் தேவையாயிருந்தால், விவசாய கோவாபரேடிவ், ரெவினியூ இலாகாக்களின் உதவிகொண்டு அதை அடையலாம்.

நிலத்தின் செழுப்புத் தன்மை அதிகரித்தால்தான் குடிகளுக்கு க்ஷேமம் உண்டு. ஆகாரப் பஞ்சம் ஏற்படாது.

மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியப்பன்னு, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட்,
மதரூஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ, (பிரஸிடென்ட்.)

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதாரர்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

பாலிஸி தொகை	—	**1,30,00,000.**
க்ஷேமநிதி	—	**10,00,000.**

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

வி. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.